# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,
# திருவல்லிக்கேணி, சென்னை–5.

தொலைபேசி எண். 28442462, 28447042.

## ந.க.எண்.156/2014 அ3 நாள் 23.05.2014

# மறு பொது ஏலம் மற்றும் மறு டெண்டர் அறிவிப்பு.

சென்னை–5, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில்

09.06.2014அன்று கீழ்க்கண்ட இனங்களுக்கு பசலி 1424க்கு மட்டும் (1.7.2014 முதல் 30.6.2015 முடிய) உரிமங்கள் பொது ஏலம்/டெண்டர் மூலமும், இவ்வாலய திருவாய்மொழி மண்டபத்தில் அறிவிப்பில் கண்ட டேவணித் தொகை மற்றும் பிற நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் முன்னிலையில் இத்துறையின் சட்ட விதிகளின்படி பகிரங்கமாக விடப்பட உள்ளது.

கீழ்க்கண்ட டெண்டர் இனங்கள் 09.06.2014 மாலை 02.00 மணி வரை சீலிட்ட டெண்டர்கள் வரவேற்கப்பட்டு, அன்றே மாலை 03.00 மணிக்கு டெண்டர் திறத்தல்.

| வ. எண். | டெண்டர் விபரம். | டெபாசிட் |
|---|---|---|
| 1 | சுகாதார பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் ஒப்பந்தப்படிவத்தின் விலை ரூ.100 | 50,000 |

கீழ்க்கண்ட பொது ஏல இனங்கள் 09.06.2014 அன்று மாலை 2.00 மணிக்குள் சீலிட்ட டெண்டர்கள் வரவேற்கப்பட்டு, அன்றே பிற்பகல் 03.00 மணியளவில் பொது ஏலம் மூலமும் நடைபெறும்.

| வ. எண். | பொது ஏல / டெண்டர் விபரம். | டெபாசிட் |
|---|---|---|
| 1 | முடி சேகரிக்கும் உரிமம் | 5,000 |

இவைகளின் நிபந்தனைகளை ஆலய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஒம். செ.சிவாஜி,
துணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்.

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளர்

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை – 5

<u>சுகாதார பணிக்கான மறு ஒப்பந்தப்புள்ளி / மறு விலைப்புள்ளி கோரும் அறிவிப்பு</u>

1. குத்தகைக் காலம் : 12 மாதங்கள்

2. விலைப்புள்ளி திறக்கும் நாள், நேரம் : 09.06.2014 மாலை 3.00 மணி .

3. இடம் : திருக்கோயில் அலுவலகம்

| வ. எண் | இனம் | முன் வைப்புத் தொகை | தேவையான ஆட்கள் |
|---|---|---|---|
| 1. | பிரதான திருக்கோயில், வரதராஜா சுவாமி சன்னதி, லட்சுமி நரசிம்மர் சுவாமி சன்னதி, லட்சுமி நரசிம்மர் சுவாமி கல்யாண மண்டபம், அன்னதான மண்டபம், திருக்கோயில் அலுவலகம், குளம் மற்றும் குளம் படிகள், பேயாழ்வார் சன்னதி, நம்மாழ்வார் சன்னதி, 36 கால் மற்றும் இதர மண்டபம், தேரடி மற்றும் சுற்றுப்பகுதிகள், சேவார்த்திகள் தங்கும் விடுதி, திருக்கோயில் சுற்றுப்புறம் | ரூ.50,000/– | துப்புரவு பணியாளர்கள் – 10<br>இயந்திரங்கள் இயக்குபவர் – 1<br>மேற்பார்வையாளர் – 2 |

மேற்காணும் இனங்களுக்கான ஒப்பந்தப் படிவத்தின் விலை ரூ.100/– ஆகும். ஒப்பந்தப் படிவத்துடன் மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையினை (E.M.D) ‘‘துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை–5’’ என்ற பெயரி வங்கி வரைவோலையாக எடுத்து 09.06.2014 மாலை 02.00 மணிக்குள் சேர்ப்பிக்கப்பட வேண்டும். இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் அறிந்து கொள்ளலாம்.

ஒம். செ.சிவாஜி,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்(கூ.பொ)

உண்மைநகல்/உத்தரவுப்படி

மேலாளர்

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,
# திருவல்லிக்கேணி, சென்னை – 5

## சுகாதாரப் பணியாளர்களுக்கான நிபந்தனைகள்

1. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் 09.06.2014 மாலை 02.00 மணி வரை பெறப்பட்டு அன்றே வருகை தரும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாலை 3.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்பவர்கள் 09.06.2014 பிற்பகல் 1.45 மணிக்குள்ளாக வைப்புத் தொகையாக ரூ.50,000/– வங்கி வரைவோலையாக திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.
4. ஒப்பந்தப் படிவத்தின் விலை ரூ.100/– ஆகும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்த படிவத்தின் கட்டணம் திரும்ப வழங்கப்படமாட்டாது.
5. ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அவர்களால் உறுதி செய்யப்பட்ட பின்னரே வைப்புத் தொகைகள் திருப்பி அளிக்கப்படும்.
6. இப்பணியின் ஒப்பந்தக்காலம் பசலி 1424க்கு (01.07.2014 முதல் 30.06.2015 முடிய) ஒரு வருடத்திற்கு ஆகும். அல்லது ஒப்பந்தப்பணி மேற்கொள்ளப்படும் நாள் முதல் ஒரு வருடகாலமாகும்.
7. இப்பணிக்குரிய முன்வைப்புத் தொகை துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி என்ற பெயரில் வரைவோலையாக மட்டும் வழங்கப்பட வேண்டும்.
8. இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கும் நிறுவனம் இப்பணியில் குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் அனுபவம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும். அதற்குண்டான சான்றினை தாக்கல் செய்ய வேண்டும்.
9. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நிறுவனம் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
10. கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தது விருந்தினர்கள் விடுதி மற்றும் தங்கும் விடுதிகளை இயந்திரங்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு சுகாதார பணிகள் மேற்கொண்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
11. கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் சுகாதாரப்பணிகள் மூலமாக சராசரியாக ஒரு நிதியாண்டிற்கு 25 இலட்சங்கள் வருவாய் பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நிதி ஆண்டிலும் எவ்வளவு தொகை ஈட்டப்பட்டது என்ற விபரத்தினை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
12. இப்பணிக்கு ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொழிலாளர் நல நிதி மற்றும் இதர நிதிகள் அந்நிறுவனமே செலுத்த வேண்டும். திருக்கோயிலிலிருந்து எவ்வித தொகையும் வழங்கப்படமாட்டாது. சேமநலநிதி பணியாளர்கள் மாநில காப்பீடு மற்றும் சேவை வரி கட்டியதற்கான துறைச்சான்று தாக்க செய்யப்பட வேண்டும்.

13. இத்திருக்கோயிலில் வேலை நேரப்பணி முறை அமுலில் உள்ளதால் சாதாரண நாட்களில் காலை வேலை நேரம் 5 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும், மதிய வேலை நேரப்பணி பிற்பகல் 1 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் பொது நேரம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையும் இயங்கும். அதன்படி சுகாதாரப் பணியாளர்களும் செயல்பட வேண்டும்.

14. வேலை நேரப்பணி பணியாளர்கள் வேலை நேரம் துவங்கும் நேரத்திற்கு அரை மணி நேரம் முன்னதாக பணியில் ஆஜரில் இருக்க வேண்டும்.

15. சுகாதாரப்பணியாளர்கள், உள்துறையில் உள்ள அமீனா / மேற்பார்வையாளர் ஆகியோரிடம் உள்ள வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்த பின்னரே பணியை துவங்க வேண்டும்.

16. சுகாதாரப் பணியாளர்கள் மாற்றுப்பணியாளர் வரும் வரை அவரது பணியை தொடர்ந்து செய்தல் வேண்டும். இதில் ஏதாவது குறைபாடு ஏற்பட்டால் அதற்கு ஒரு மாதத்திற்கு இப்பணிக்கு வழங்கும் தொகையில் 5% தண்டமாக வசூலிக்கப்படும்.

17. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் விடுப்பு எடுக்கும்போது அதற்கு மாற்று ஏற்பாடு அந்நிறுவனமே செய்ய வேண்டும். மாற்று பணியாளர்கள் விபரத்தை உள்துறை அமீனா / மேற்பார்வையாளர் தெரிவிக்க வேண்டும்.

18. பணியாளர்கள் இப்பணியின் போது ஏற்படும் கவனக்குறைவால் இழப்பு ஏற்பட்டால் அதில் ஏற்படும் தொகையினை கணக்கிட்டு உரிய இழப்பீடு மேற்படி நிறுவனத்திடம் வசூலிக்கப்படும்.

19. ஒப்பந்த காலத்தில் ஒவ்வொரு பட்டியலின் மொத்த தொகையிலிருந்து வருமானவரி, கூடுதல் வரி, கல்வி வரி, மற்றும் தொழிலாளர் நல நிதி அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படும் வரி விகிதங்களின்படி பிடித்தம் செய்யப்படும்.

20. ஒவ்வொரு மாதத்திற்கான பட்டியல் சமர்ப்பிக்கப்படும் போது அனைத்து வரிகளும் உரிய துறைகளில் செலுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

21. இப்பணியில் ஈடுபடும் நிறுவனத்திற்கு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஒப்பந்த சட்டம் மட்டும் பொருந்தும், தொழிலாளர்கள் நல சட்டம் எதுவும் பொருந்தாது.

22. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொண்டு பணிஉத்திரவு வழங்கிட நிறுவனம் திருக்கோயில் சட்ட திட்டங்கள் மீறி செயல்படுவதாக புகார் எதுவும் வரப்பெற்றால் நிறுவனத்தாருடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் எவ்வித விளக்கமும் தராமல் இரத்து செய்யப்பட்டு முன்வைப்பு தொகை முடக்கப்படும்.

23. இப்பணிக்குரிய ஒப்பந்தத் தொகை ஒவ்வொருமாதமும் 10ம் தேதிக்குள் தங்களது கேட்பினை ஆலய மேற்பார்வையாளர் மூலமாக சமர்ப்பித்து பின்பு நிறுவனத்தின் முக்கிய பொறுப்பில் உள்ள நபர் வசம் நேரடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

24. மேற்படி நிறுவனம் குற்றச்செயக்காக தண்டிக்கப்பட்ட நிறுவனமாக இருக்கக்கூடாது.

25. இத்திருக்கோயிலில் சுகாதாரப்பணியாளர்களுக்கு என வருகைப்பதிவேடு ஒன்று பேணப்பட்டு அதில் பணிக்கு வருகைபுரிந்த நேரமும் பணி முடித்து சென்ற நேரமும் குறிப்பிடப்பட வேண்டும்.

26. இப்பணிக்கு திருக்கோயிலால் எவ்வித முன்பணமும் வழங்கப்பட மாட்டாது.

27. சுகாதாரப்பணியாளர்களுக்குரிய சீருடையை அந்தந்த நிறுவனமே பொறுப்பேற்று ஒரே மாதிரியான சீருடைகள் வழங்க வேண்டும். சீருடை திருக்கோயிலிலிருந்து வழங்கப்படமாட்டாது.

28. மேற்பார்வையாளர்கள் சீருடையும், சுகாதாரப்பணியாளர்களின் சீருடையும் வெவ்வேறு விதமாக இருத்தல் வேண்டும்.

29. ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்படாத நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிந்தவுடன் முன்வைப்பு தொகை திரும்ப வழங்கப்படும். குறைந்த டெண்டர் கொடுத்து உறுதி செய்யப்பட்டவர், பணி உத்திரவு வழங்கப்பட்டவுடன் உடனடியாக ரூ.50/– மதிப்புள்ள அரசு முத்திரை தாளில் ஆலய துணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

30. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது உரிமையாளர் இத்திருக்கோயில் பணியிலோ அல்லது அவர்களது உறவினர் இத்திருக்கோயில் பணியில் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

31. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகவும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு செய்யாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

32. சுகாதாரப்பணிகளுக்கு தேவைப்படும் பினாயில், பிளீச்சிங் பவுடர், ஆசிட், துடைப்பம், பிரஷ் போன்ற சுகாதாரப் பொருட்கள் மேற்படி நிறுவனமே வழங்க வேண்டும். ஆலயத்திலிருந்து இவை வழங்கப்பட மாட்டாது.

33. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் நிறுவனம் இப்பணிக்காக நியமிக்கும் துப்புரவு பணியாளர்கள் – 10 நபர்கள், இயந்திரங்கள் இயக்குபவர் – 1 நபர்கள் மற்றும் மேற்பார்வையாளர் – 2 நபர் ஆக கூடுதல் 13 நபர்களின் இரு புகைப்படங்கள், அவர்களின் முழு முகவரி ஆகியவற்றை திருக்கோயில் அலுவலகத்தில் வழங்க வேண்டும். பணியில் நியமிக்கப்படும் இந்த நபர்கள் பொதுமக்களிடமிருந்தும் சேவார்த்திகளிடமிருந்தும் எவ்வித தொகையும் பெறுதல் கூடாது.

34. இப்பணியாளர்கள் திருக்கோயிலுக்கு எந்தவித நிதிஇழப்பும் ஏற்படுத்தக் கூடாது.

35. திருக்கோயிலுக்கு சொந்தமான சிறுகுடிலில் உள்ள பெட்ஷீட்டுகள், தலையணைகள் ஆகியவற்றை துவைத்து பின் சலவை செய்து பராமரித்துக் கொள்ளும் பணியை நிறுவனமே தமது சொந்த செலவிலேயே செய்து கொள்ள வேண்டும்.

36. சிறுகுடிலில் தங்கும் சேவார்த்திகள் அறையை காலிசெய்தபின் அதனை உடன் சுத்தம் செய்ய வேண்டும்.

37. சுகாதாரப்பணியாளர்களுக்கு பணி நேரத்தில் ஏற்படும் அசௌகரியங்களுக்கோ, சுகவீனங்களுக்கோ திருக்கோயில் பொறுப்பேற்காது.

38. திருக்கோயிலுக்கோ அல்லது சிறுகுடிக்களுக்கோ ஏதேனும் மராமத்து இழப்பு ஏற்பட்டால் மேற்படி நிறுவனத்தாரே அதற்குண்டான இழப்பினை செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

39. சுகாதாரப்பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்கள் ஏதேனும் தவறான செயல்களில் ஈடுபடுவது தெரியவரின் நிறுவனத்தாரே அதற்குண்டான இழப்பினை செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

40. சுகாதாரப்பணியாளர்களின் சீருடை, அடையாள அட்டை, ஆகியவற்றை நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

41. ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பிக்கும் நிறுவனம் சுகாதாரப்பணியாளர் நபர் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு தொகை என்றும் மேற்பார்வை பணியாளர் நபர் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு தொகை என்றும் குறிப்பிட்டு ஒப்பந்த படிவத்தை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

42. திருவிழாக்காலங்களில் இத்திருக்கோயிலின் துணை ஆணையர்/ செயல் அலுவலர் அவ்வப்போது பிறப்பிக்கும் சுகாதாரப்பணிகள் சார்ந்த நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

43. இப்பணியில் ஈடுபடும் நிறுவனத்திற்குரிய தொழிலாளர்களுக்கு ஏதாவது பணி சம்பந்தமாக வழக்கு பிரச்சனை வந்தால் அதனை அந்த நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும். இத்திருக்கோயில் பொறுப்பேற்காது.

44. அடித்தல் திருத்தல் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அடித்தல் திருத்தல் இருந்தால் அந்த இடத்தில் சுருக்கொப்பம் இட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு அடித்தல் திருத்தலுடன் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டால் அவைகள் நிராகரிக்கப்பட வேண்டும்.

45. இப்பணியில் ஈடுபடும் நபர்களின் பெயர், ஒழுக்கச்சான்று மற்றும் உடல்தகுதி போன்றவைகளை அவரை பணியில் நியமிக்குமுன் இத்திருக்கோயிலில் சமர்ப்பிக்க வேண்டும்.

46. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நிறுவனத்தினர் மேல் திருக்கோயிலால் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்தாலும் அல்லது அந்நிறுவனம் திருக்கோயிலின் மேல் வழக்கு தொடர்ந்தாலும் அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

47. இப்பணியில் உள்ள குறைபாடு களைவதற்கும், பாதுகாப்பு பணியினை புலப்படுத்துவதற்கும் அந்நிறுவனத்தின் சார்பில் முக்கிய பொறுப்பில் உள்ள நபர், திருக்கோயிலின் துணை ஆணையர்/ செயல் அலுவலர் அறிவித்த நாளில் அவரிடம் நேரடியாக சென்று கலந்து ஆலோசிக்க வேண்டும்.

48. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் துணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களின் நேரடியாக கண்காணிப்பில் பணிபுரிய வேண்டும். அவர் உத்திரவின்றி பணியாளர்களை வேறு இடத்திற்கு மாற்றவோ அல்லது பணிநேரத்தை மாற்றவோ கூடாது.

49. புரட்டாசி சனி, ஆங்கிலப்புத்தாண்டு, வைகுண்ட ஏகாதசி, பிரம்மோற்சவம், இலட்சார்ச்சனை ஆகிய திருவிழா நாட்களில் கூடுதல் பணியாளர்கள் பணியாற்ற வேண்டும். அதற்கு எவ்வித தொகையும் வழங்கப்பட மாட்டாது.

50. ஒப்பந்தப்புள்ளியினை எவ்வித காரணமின்றி நிராகரிக்க துணை ஆணையர்/ செயல் அலுவலர் அதிகாரிக்கு உரிமையுண்டு.

51. ஒப்பந்தப்புள்ளி திறப்பு காலத்தினை எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாமல் அதனை தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ துணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு உரிமையுண்டு.

52. சுகாதாரப்பணியாளர்கள் பணிபுரியம் இடத்தினை திருக்கோயில் நிர்வாகத்தால் அவ்வப்போது மாற்றப்படும். அதற்கேற்றவாறு பணிபுரிய வேண்டும்.

53. திருக்கோயிலில் உள்ள குப்பைகளை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும். எப்போதும் திருக்கோயிலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

54. குப்பைகளை அகற்ற தங்களது சொந்த பொறுப்பில் வாகனம் மற்றும் பிற ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

55. திருக்கோயிலை பிரதிவாரம் திங்கட்கிழமை கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதற்கான தண்ணீர் வசதி திருக்கோயிலால் செய்து தரப்படும்.

56. டெண்டர்தாரால் நியமிக்கப்படும் நபர்களின் பணிகுறித்த உரிய திருக்கோயில் உள்துறை மேற்பார்வை அலுவலர்/அமீனா சான்று அளிக்கப்பட்டால்தான் ஒவ்வொரு மாதமும் பணி செய்ததற்கான தொகை வழங்கப்படும்.

57. சுகாதாரப்பணியாளர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அதற்கு அந்த நிறுவனமே பொறுப்பேற்று அவருக்கு வழங்கவேண்டிய குடும்பநலநிதி இதர தொகையினை வழங்க வேண்டும். இதற்கு திருக்கோயில் நிர்வாகம் எவ்வித பொறுப்பு ஏற்காது.

58. சுகாதாரப்பணியாளர்கள் உள்துறை மேற்பார்வையாளர், அமீனா மற்றும் ஆலய உயர் அதிகாரிகள் அவ்வப்போது தெரிவிக்கும் சுகாதாரப்பணிகளையும் உடனடியாக செய்ய வேண்டும்.

59. 36 கால் மண்டபம் 1 மற்றும் 2 பிரகாரங்களில் ஒட்டடை மற்றும் தூசிகள் இல்லாதவாறும் மதில்சுவர்களில் புல், பூண்டுகள், ஆலமர, அரசமர செடிகள் முளைக்காதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

60. அன்னதானம் பாத்திரங்கள் கழுவுதல், சாப்பாடு பரிமாறும் அறை, தயார் செய்யும் அறை இடங்கள் தினமும் கழுவி சுத்தம் செய்தல்

61. தொழிலாளர் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

62. வருமான வரித் துறையிடமிருந்து நிரந்தர கணக்கு எண் பெற்றிருத்தல் வேண்டும்.

உறை – 1

நிறுவனத்தின் தகுதிக்கான புள்ளிவிவரங்களுடன் பட்டியலிட்டு, தகுதிக்கான பத்திரங்களை அத்தாட்சியிட்டு, ஒப்பந்தாரர் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டு இருத்தல் வேண்டும்.

உறை – 2

நிதியாதாரங்களுக்கான விவரங்கள், விலைப்பட்டியலுக்கான விவரங்களை ஒப்பந்ததாரர் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டு உறை சீலிட்டு ஒட்டப்பட வேண்டும்.

உறை – 3

உறை – 1 மற்றும் 2 உறை – 3ல் வைத்து ஒட்டியிருத்தல் வேண்டும். எந்த உறையாவது சீலிடப்பட்டு ஒட்டப்படாமல் இருந்தால் அந்த ஏலம் முழுமையாக இல்லை எனக் கருதப்பட்டு அந்த உறை நிராகரிக்கப்படும் திறக்கப்படமாட்டாது.

ஒம். செ.சிவாஜி,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்(கூ.பொ)

உண்மைநகல்/உத்தரவுப்படி

மேலாளர்